ISSN: 2582-9513

PRANAV JOURNAL OF FINE ARTS

# மேற்கத்திய நவீன இசையின் தோற்றமும் வளர்ச்சியும்

ஜெயப்பிரகாஷ் .S

முனைவர் பட்ட மாணவர்

TDES - தமிழ்ப் பல்கலைக்கழகம்

**ஆய்வு நோக்கம் :**

உலக நாடுகளில் பிரபலமான மேற்கத்திய நவீன இசையின் தோற்றத்தையும் , வளர்ச்சியையும் ஆய்வு செய்து அவை எத்துணை இசை வரலாற்றில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது என்று வரலாற்று நோக்கில் ஆய்வு செய்து விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வுச்சுருக்கம் :**

மேற்கத்திய நவீன இசையின் தோற்றமும் , வளர்ச்சியும் என்பது தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்ததை மையமாகக் கொண்டே அமைந்துள்ளது. இவ்வளர்ச்சியானது கி.பி. 1800 காலகட்ட துவக்கத்திலிருந்தே நவீன இசை பதிவுகளான வேக்ஸ் ரெக்கார்ட்ஸ் , போனோகிராப்ஸ், வினைல் ரெக்கார்ட்ஸ் எனத் துவங்கி இன்றைக்கு நாம் காணும் டிஜிட்டல் ஊடக காலம் ; வரை வந்துள்ளது. 1970 களிலிருந்து 1990-கள் வரை எட்டு டிராக்ஸ் மற்றும் அதற்கு பின்னர் ஒலிநாடா பயன்படுத்தப்பட்ட காலம் கையடக்க பிரபலமான ஊடக காலம் எனப்படும். 1980-களிலிருந்து குறுந்தகடு , கணிணி, கைபேசி, டேப்லெட்டிஸ் மற்றும் இணையதள தொழில் நுட்பங்கள் வாயிலாக நவீன இசை கடத்தப்பட்டுள்ளது. மேற்கத்திய நவீன இசை பொது நிகழ்ச்சிகள் , தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் (ஆவுஏ)இ யூடியூப் , பன்டோரா அல்லது ஸ்பாட்டிபை அமேசான் மற்றும் ஐடியூன்ஸ் வழியாக கடத்தப்பட்டு வருகிறது. மேற்கத்திய நவீன இசையில் கிபி 1800 முதல் 2023 வரையுள்ள பல்வேறு கால கட்டங்களில் பல இசை வல்லுநர்கள் தோன்றி தங்களது பங்களிப்பினை ஆற்றியுள்ளனர். இக்கால கட்டங்களில் பலவகை நவீன இசை வடிவங்களும் தோன்றியுள்ளன. மேற்கத்திய நவீன இசையின் தோற்றம் என்பது தொழில்நுட்ப வளர்ச்சியை மையமாக கொண்டு வளர்ச்சியடைந்துள்ளது. மேற்கத்திய நவீன இசையானது நேரடி நிகழ்ச்சிகளாகவும் பின்னர் பதிவு செய்யப்பட்டு வானொலி , தொலைக்காட்சி பெட்டி , இணையதளம் மற்றும் டிஜிட்டல் ஊடகம் வாயிலாகவும் உலக மக்களுக்கு கடத்தப்பட்டுள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சியை மையமாகக்கொண்டு மின்னணு இசைக்கருவிகளும் இசை நிகழ்ச்சியை பிறருக்கு கடத்தும் விதமாக மின்னணு சாதனங்களும் கோலோச்சத் துவங்கின.

**திறவுச்சொற்கள்:**

மேற்கத்திய நவீன இசை , நேரடி இசை நிகழ்ச்சிகள் டிஜிட்டல் ஊடக காலம் , வானொலி, தொலைக்காட்சி பெட்டி , இணையதளம், மின்னணு இசைக்கருவிகள் , மின்னணு சாதனங்கள், யூடியூப், ஸ்பாட்டியை, ஐடியூன்ஸ் மற்றும் அமேசான்.

ISSN: 2582-9513

**தலைப்பு அறிமுகம்:**

மனிதன் இயற்கையின் ஓசைகளையும் , பறவைகளின் ஒலிகளையும் கேட்டவுடன் இன்னிசை ஒலிகைகளை ஆராயத் துவங்கி விட்டான். தன்னுடைய குரலில் இசைப்பாடல்கள் பாட முயற்சித்தும் , தோலினால் செய்யப்பட்ட தாளக்கருவி , விலங்குகளின் எலும்பினாலான குழல் , மூங்கிலிலான குழல் கருவிகள் மற்றும் கையினால் செய்யப்பட்ட லையர் (தந்திகருவி) மூலமும் இசைத்துள்ளான்.

மேற்கத்திய நவீன இசையின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பான மேற்கத்திய நவீன இசையானது எக்கால கட்டங்களில் , எப்பகுதிகளில் பல்வேறு நவீன இசை வடிவங்களுடன் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை உணர்த்துகிறது. மேற்கத்திய நவீன இசையென்பது ஐந்து அல்லது பத்து வருடங்களுக்கு ஒருமுறை புதுப்புது இசை வடிவங்களுடன் மாறிக்கொண்டே இருக்கும். மேற்கத்திய நவீன இசையில் கி.பி. 1800 முதல் 2023 வரையுள்ள பல்வேறு கால கட்டங்களில் பல இசை வல்லுநர்கள் தோன்றி தங்களது பங்களிப்பினை ஆற்றியுள்ளனர். இக்கால கட்டங்களில் பல வகை நவீன இசை வடிவங்களையும் அவர்கள் உருவாக்கியுள்ளனர். மேற்கத்திய நவீன இசையென்பது தொழிநுட்பம் வளர்ச்சிடையடைந்ததை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளது.

இவ்விசையானது மின்னணு சாதனங்களின் உதவியுடன் பொது நிகழ்ச்சிகள் , வானொலி, தொலைக்காட்சி, யூடியூப், பண்டோரா அல்லது ஸ்பாட்டிபை , அமேசான் மற்றும் ஐடியூன்ஸ் வழியாக கடத்தப்பட்டு வருகிறது. மேலும் கையடக்க டிஜிட்டல் ஊடகங்கள் (டிஜிட்டல் கைபேசி மற்றும் டேப்லெட்டிஸ்) வாயிலாக மேற்கத்திய நவீன இசை உலகமெங்கும் மக்கள் பயன்படுத்தும் இசையாக மாறியுள்ளது. அமெரிக்கா , இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் என்னென்ன மேற்கத்திய நவீன இசை வெளியாகின்றனவோ அவை டிஜிட்டல் ஊடகங்கள் வாயிலாக நொடிப்பொழுதில் உலகெங்கும் மக்களை சென்றடைந்து விடுகிறது. புதுப்புது மேற்கத்திய நவீன இசை வடிவங்கள் மின்னணு சாதனங்கள் உதவியுடன் டிஜிட்டல் ஊடகங்கள் வாயிலாக உலக முழுவதும் கடத்தப்பட்டு விடுகிறது.

**மேற்கத்திய நவீன இசையின் தோற்றம்:-**

அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வெகுஜன மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த மக்களிசையின்( நாட்டுப்புற இசை) நவீன இசை வடிவம் மேற்கத்திய செவ்விசையின் இசை நுணுக்கங்களுடன் கலந்து மின்னணு சாதனங்களின் உதவியுடன் சிறு இசைக்குழுக்களாக பொதுமக்கள் மத்தியில் இசை வல்லுநர்களால் இசை நிகழ்ச்சி நிகழ்த்தப்பெற்றுள்ளது.

மேற்கத்திய நவீன இசையின் பரிணாம வளர்ச்சியென்பது 19-ம் நூற்றாண்டில் துவங்கி 20-ம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்துள்ளது. 21-ம் நூற்றாண்டில் டிஜிட்டல் தொழில்நுட்பம் வாயிலாக வெகுவிரைவில் உலகிலுள்ள அனைத்து மக்களும் கேட்கின்ற இசையாக உருவெடுத்துள்ளது. மேற்கத்திய நவீன இசையென்பது வெகுவிரைவில் போக் மியூசிக் அல்லது கண்டிரி மியூக் எனப்படும் நாட்டுப்புற இசை வடிவத்திலிருந்து

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513
வளர்ச்சியடைந்துள்ளதை வரலாற்று ஆய்வுகள் வாயிலாக அறிய முடிகிறது. மேற்கத்திய நவீன இசையின் துவக்க கால இசை வடிவங்களாக போக் மியூசிக் , கன்டிரி மியூசிக் , ராக்டைம், ப்ளாக் பேஸ் மின்ஸ்ட்ரல் , ப்;ஸ் மற்றும் ஜாஸ் போன்றவை கருதப்படுகின்றன. இவ்விசை வடிவங்களில் புதிய இசையமைப்புகளை வெள்ளைக்கார மற்றும் கறுப்பின இசை வல்லுநர்கள் உருவாக்கியுள்ளனர். பொதுவாக மேற்கத்திய செவ்விசை மற்றும் நவீன இசை என்பவை போக் மியூசிக் மற்றும் கன்டிரி இசை எனப்படுகின்ற நாட்டுப்புற இசை வடிவத்திலிருந்தே பரிணாம வளர்ச்சியடைந்துள்ளன என்பதை இசை வரலாற்று ஆய்வுகள் வாயிலாக அறிய முடிகிறது. இதில் செவ்விசை எனப்படுபவை இசை இலக்கணங்களுடன் மாறா தன்மையுடையன. ஆனால் நவீன இசை எனப்படுபவை காலத்திற்கேற்பவும் , சூழலுக்கேற்பவும், மின்னணு வளர்ச்சிக்கேற்பவும் , தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்பவும் , மக்களின் ரசனைக்கேற்பவும் மாறும் தன்மையுடையவை.

**அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மேற்கத்திய நவீன இசையின் வளர்ச்சி:-**

மேற்கத்திய நவீன இசை வளர்ச்சியில் வெள்ளைக்கார மற்றும் கறுப்பின மக்களின் பங்கு மகத்தானது. ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்கா கலப்பு கறுப்பின மக்கள் மேற்கத்திய நவீன இசை வளர்ச்சியில் தங்களது பங்களிப்பினை செய்துள்ளனர். அமெரிக்கா , இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் என்னென்ன மின்னணு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டுள்ளதோ அதை பொறுத்து மின்னணு இசைக் கருவிகளும் இசை நிகழ்ச்சிக்கு பொதுவாக பயன்படுத்தப்பட்டு மேற்கத்திய நவீன இசை வளர்ச்சியடைந்துள்ளது.

மேற்கத்திய நவீன இசையின் பரிணாம வளர்ச்சியானது அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தை மையமாகக்கொண்டு ஐரோப்பிய நாடுகள் , ஆஸ்திரேலியா, கனடா மற்றும் இதர உலக நாடுகளுக்கு பரவி உள்ளது. இதில் குறிப்பாக அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தை சார்ந்த வெள்ளைக்கார மற்றும் ஆப்பிரிக்கா - அமெரிக்கா இசை வல்லுநர்களின் பங்கு மிகவும் அளப்பரியதாக கருதப்பட்டு வருகிறது. 19, 20 மற்றும் 21 ஆம் நூற்றாண்டு கால கட்டங்களில் மின்னணு மற்றும் ; தொழில்நுட்ப வளர்ச்சியினால் மேற்கத்திய நவீன இசையானது வளர்ச்சியடைந்து உலக நாடுகளுக்கு வெகு விரைவில் ; கடத்தப்பட்டுள்ளது.

ஆமெரிக்காவின் நவீன இசையாக கருதப்படுபவை ராக் டைம், பிளாக்பேஸ் மின்ஸ்ட்ரல், டிரடிசினல் பாப், பு;ஸ், ஜாஸ், சுவிங், ராக், பு;கிறாஸ், கன்டிரி, ஆரூபி, டு வோப், காஸ்பல், போக், சோல், பங்க், டிஸ்கோ ஹவுஸ், டெக்னோ, சல்சா, கிரஞ்ச், கிப்ஹாப்ஃரேப், ஹெவி மெட்டல், புங்க், ரிலிஜியஸ், போக் அமெரிக்கனா, பூகலோ, தேஜனோ, ரக்கீட்டன், சர்ப் என்பவையாகும்.

இங்கிலாந்தின் நவீன இசையாகக் கருதப்படுபவை பீட் மியூக் , சைக்செலிக் மியூசிக் , புரகிரசிவ் ராக், ஹெவிமெட்டல், நியூ வேப,; இன்டஸ்டிரியல் மியூசிக், பிரிட்டிஷ் போக்ராக்,

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

போக், புங்க், ஆசிட் ஜாஸ் , டிரம் அயன்டு பேஸ் , கிரிம், அப்ரோ சுவிங் , டப்ஸ்ச்டெப், பிரிட்டாப், போக் மியூசிக் , ஜாஸ், பாப் மியூசிக் என்பவை. மேலும் 20-ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவின் ப் ;ஸ், ஜாஸ், ராக் அன்டு ரோல் போன்ற இசைகளின் தாக்கமும் இங்கிலாந்து நவீன இசையில் புதிய பரிணாமத்தை அடையச் செய்தது.

ஆமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் பயன்படுத்தப்பட்ட மேற்கத்திய நவீன இசை வடிவங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கும் , ஆஸ்திரேலியா, கனடா மற்றும் இதர உலக நாடுகளுக்கும் வெகு விரைவில் தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்ததன் வாயிலாக கடத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கத்திய நவீன இசையானது உலகின் அனைத்து கண்டங்களிலும் வெகுஜன மக்கள் பயன்படுத்தும் இசையாக உருவெடுத்துள்ளது. இவ்விசையானது காலத்திற்கேற்ப மாறும் நவீன தன்மையுடன் மக்களை சென்றடைந்துள்ளது. 19-ஆம் நூற்றாண்டில் பிரபலமடைந்த மேற்கத்திய நவீன இசை வடிவங்கள் 20- ஆம் நூற்றாண்டில் மேலும் , செழுமையடைந்து மின்னணு கருவிகள் மற்றும் மின்னணு இசைக்கருவிகளின் உதவியுடனும் , தொழில் நுட்ப வளர்ச்சியியுடனும் பின்னிப்பினைந்து 21-ஆம் நூற்றாண்டில் உலகம் முழுவதிலும் பயன்படுத்தும் இசையென பரிணமித்துள்ளது.

மேற்கத்திய நவீன இசையானது போக் மியூசிக் மற்றும் கன்டிரி மியூசிக்கின் அடிப்படையுடனும், மேற்கத்திய செவ்விசையின் இசை இலக்கணங்கள் மற்றும் துள்ளல் தாள நடையுடனும் , புதுப்புது நவீன இசை வடிவங்களுடனும் , டிரம்ஸ் மற்றும் மின்னணு இசைக்கருவிகளின் உதவியுடனும் பார்வையாளர்களை எளிதில் கவரும் தன்மையுடையது.

**மேற்கத்திய நவீன இசையில் பயன்படுத்தப்படும் ஒலி இசைக்கருவிகள் மற்றும் மின்னணு இசைக்கருவிகள்:-**

மேற்கத்திய நவீன இசையில் இசை வல்லுநர்களால் கையாளப்பட்ட மற்றும் தற்போதும் கையாளப்பட்டு வரும் ஒலி இசைக்கருவிகள் மற்றும் மின்னணு இசைக்கருவிகளாவன அக்கஸ்டிக் கிதார் , எலக்ட்ரிக் கிதார் , பேஸ், டிரம்ஸ், டிரம் இயந்திரம், பியானோ, கீபோர்டு, யுக்ளேளே, பேஞ்சோ, சிந்தசைசர், வயலின், வயோலோ, செல்லோ, அக்கஸ்டிக் பேஸ் , கிளாரினெட், சிஇதர், ஓப், சாக்ஸோபோன், டிரம்ப்ட், டிராம்போன்,கீ பு ;ட், பெர்கியூசன்ஸ், பேஸ் டிரம் , ப்ராஸ் வகை இசைக்கருவிகள் , காற்றுக் கருவிகள,; பிரெஞ்சுகான், பேஸ் கிளாரினெட் , பேஸ் டிராம்போன் , ஹார்மோனிக்கா, ஆர்கன், மாண்டலின் என்பன. இதில் குறிப்பாக கிதார் , பேஸ், டிரம்ஸ், பியானோ மற்றும் கீபோர்டு ஆகியவை மேற்கத்திய நவீன இசையின் அனைத்து வடிவங்களுக்கும் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளாக மேற்கத்திய நவீன இசையின் துவக்கம் முதல் இன்று வரை இருந்து வருகிறது. மேற்கத்திய நவீன இசையின் வடிவங்களுக்கும் , தன்மைகளுக்கும் ஏற்ப ஒலி இசைக்கருவிகள் மற்றும் மின்னணு இசைக்கருவிகள் இசை வல்லுநர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

**மேற்கத்திய நவீன இசை வடிவங்கள்:-**

மேற்கத்திய நவீன இசை வடிவங்கள் எனப்படுபவை 19-ஆம் நூற்றாண்டின் கால கட்டங்களில் துவங்கி 21-ஆம் நூற்றாண்டின் இன்றைய கால கட்டங்கள் வரை பல்வேறு இசை வல்லுநர்களால் உருவாக்கப்பட்டுள்ளன. அவையாவன ராக் டைம் , பிளாக் பேஸ் மின்ஸ்ட்ரல், ப்;ஸ், ஜாஸ், போக் மியூசிக் , கண்டிரி மியூசிக் , டேன்ஸ், ப்ராட்வே, ஸ்டேன்டட்டஸ், சுவிங், டிரடிஷினல் பாப் , குரோனெர்ஸ், பிக் பேன்ட் , பிபாப், நாவல் டி ஆக்ட்ஸ், பேன்ட் லீடர்ஸ், ராக் இன் ரோல், ரிதம் அன்ட் ப்;ஸ், காலிப்சோ, வோக்கல் ஜாஸ், சர்ப் ராக் , சைnடிலிக் ராக் , ப்;ஸ் ராக் , ப்ரோகிரஸ்சிங் ராக் , கேரேஜ் ராக் , புரோடஸ்ட் மியூசிக்ஃமெசேஜ், டிஸ்கோ டான்ஸ் , பங்க், நியூ வேவ் , புங்க், கிலாம் ராக் , சாப்ட் ராக் , சிங்கர், சாங்ரயிட்டர், சவுத்தர் ராக் , கண்டிரி ராக் , கண்டிரி பாப் , பாப் பவர் , சிந்த்-பாப், ஹெயர் மெட்டல் , ஹிப்ஹாப்;;, கோத்திக்ராக், ஹெவி மெட்டல் , பாப், அல்டர்னேட்டிவ் ராக், ஹார்கோர் புங்க், ஆர் ரூ பி, குரிஞ், காலேஜ் ராக், டெக்னோடிரோனிக், கேங்டர் ரேப், பபில்கம் பாப், பாய் பேன்ட், கேல் குரூப்ஸ், பாப் புங்க், மெட்டல், ஸ்கா,பிரிட்பாப்,நியூ ஜாக் ஸ்விங், கார்டு ராக் , ஹேப்பி ராக் , டேன்ஸ்-பாப், இன்டிராக், எமோ, ரக்கீட்டன், அலர்னேடிவ் மெட்டல் , நியூவேவ், ரிவைவ்வல்,டீன் பாப் ,இன்டர்நெட் ஸ்டார்ஸ் , டிஸ்னி ஆர்டிஸ்ட், அடல்ட் கன்டம்றறி, கண்டிரி பாப், பிரிட்டீஸ், சோல், லேட்டின் பாப், கிரைமே, வேப்பர் வோவ் , ஆம்பியன்ட் மியூசிக் பேஸ்லைன் , என்பவைகளாகும். இந்நவீன இசை வடிவங்களை இசை வல்லுநர்கள் இசையமைத்து இசை நிகழ்ச்சிகள் வாயிலாக உலகுக்கு அறிமுகப்படுத்தினர். இவை தற்போது உலகிலுள்ள யாவரும் கேட்கும் இசை வடிவங்களாக பிரபலமடைந்துள்ளன.

மேற்கத்திய நவீன இசையில் பிரபலமான இசைக்குழுக்கள் மற்றும் இசை வல்லுநர்கள்

மேற்கத்திய நவீன இசையானது இசைக் குழுக்கள் மற்றும் தனி இசை வல்லுநர்கள் பெயருடனும் இசை நிகழ்ச்சி நிகழ்த்தப்பட்டுள்ளன. இம்முறையானது மேற்கத்திய நவீன இசையின் துவக்க காலம் முதல் இன்று வரை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஆவ்வகையில் துவக்க காலம் முதல் இன்று வரையுள்ள மேற்கத்திய நவீன இசை குழுக்கள் மற்றும் இசை வல்லுநர்களின் பெயர்களை அறிந்து கொள்வது மிகவும் அவசியம். இதில் குறிப்பாக ஸ்காட் ஜாப்லின், ஜோசப் லேம்ப் , ஜேம்ஸ் ஸ்காட் , வால்டர் ஸ்காட் , ஜேம்ஸ் சான்டர்சன் , ஜான் உட்கோக் கிரேவ்ஸ் , தாமஸ்மோறே, ஜான்ஜ் கியால்மார்க் , ஜாண் ஹாவார்டு பைனே , ஹென்றி பிஷப் , ராபர்ட் ஸ்டீபன் ஹவ்கர் , எர்னஸ்ட் ஆன்ஸ்சூர்ட்ஸ் , ராபர்ட் ஹெரிக் , சார்லஸ் எட்வா hட் ஹரன் , லூட்விக் ஊலாண்ட் , பிரடரிச் சில்வர் , ஜான் ஹில் கிவிட் , ஹென்ட்ரி ரசல் , ஸ்டீபன் போஸ்டர் , ஸ்டீபன் குளோவர் , ஜோசப்பில்பிரிக் வெப்டர் , ஹென்றி கிளேவொர்க் , வில்லியன் ஹெச். டோனே , பெஸ்சி பெல்வுட் , ஜீலியன்

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

ஜோர்டன், இஸ்டர்ஸ், ஆர்கெஸ்ட்ரா, யுனைடெட் ஸ்டேட்ஸ் மெரைன் பேண்ட், ஜார்ஜ் ஜெ காஜ்கின், பில்லி, கோல்டன்,ஜார்ஜ் டபிள்யூ ஜான்சன் , கில்மோர்ஸ் பேண்ட் , பில் கோல்டன், டேன்,டபிள்யூ குயின் , சவுசா பேண்ட் , பில்லிமுறே, அன்வில் கோரஸ்-ஜான் யார்க் அட்லி , பாஞ்சோ-போகி மின்ஸ் டிரல்ஸ் , ஆர்தர் சொலிங்ஸ், மெட்ரோபொலிட்டன் ஆர்கெஸ்ட்ரா, ஜான் ஸ்டீல் , இஸ்சாம் ஜோன்ஸ் , ரெயின்போ ஆர்கெஸ்ட்ரா , டக் எலிங்டன்-ரிதம் பாய்ஸ் , பென்னி மெராப் ஆர்கெஸ்ட்ரா , லூயிஸ் ஆம்ஸ்ட்ராங் , பால் வொயிட் மேன், பெஸ் சிமித், பிங் கிராப்சி, பென்னிகுட்மேன், பிரங் சினட்றா, ரோஸ்மேரி குளோhனி, பில்லிஹாலிடே, எல்விஸ் பிரஸ்லி, சக் பெரி, லிட்டில் ரிச்சர்டு, நட்கிங் கோல், ரே சார்ல்ஸ், தி எவர்லி பிரதர்ஸ், தி பீட்டில்ஸ், தி ரோலிங் ஸ்டோன்ஸ், தி சுப்ரீம்ஸ், தி பீச் பாய்ஸ், அரிதா பிராங்கிளின், தி ஜிம்மி ஹென்டிரிக்ஸ் எக்பீரியன்ஸ், தி மூடி ப்;ஸ், கிரீம், தி டெம்டேசன், ஜேம்ஸ் பிரவுன், தி டோர்ஸ், தி கூ, தி ஜாக்ஸன் 5, டயானா ரோஸ், செக்ஸ் பிஸ்டல்ஸ், குயின், எல்டன் ஜான் , பில்லி ஜோயல் , அப்பா, தி ஈகிள்ஸ் , மைக்கேல் ஜாக்சன், தி போலிஸ், வொயிட்னி ஹவுஸ்டன், மடோனா, போன் ஜோவி, பிரின்ஸ், ஜனட் ஜாக்சன்,ஜார்னி, டினா டர்னர், நிர்வானா, பிரிட்னி ஸ்பியர்ஸ், பேக் ஸ்ட்ரீட் பாய்ஸ், ரெம் ஹாட் சில்லி பெப்பர்ஸ் , ரிக்கி மார்டின் , கன்ஸ் ரூ ரோசஸ் , மரியா கேரி , மெட்டாலிக்கா,எமினெம், ரிகானா, மைலி சைரஸ் , ஜெனிபர் லோப்பஸ் , டைலர் ஸ்ப்ட் , லிங்கின் பார்க் , மரூண் 5, லேடி காகா , ஜஸ்டின் டிம்பாலேக் , கோல்டு பிளே , ஜஸ்டின் பைபர், பிங், கெட்டி பேரி, தி ஸைன்ஸ், சகிரா, நோரா ஜோன்ஸ், டிஸ்னிஸ் சயல்டு, ஆடில், புருனோ மார்ஸ், பேரால் வில்லியம்ஸ், மேகன் டிரெய்னர், தீ வீக்கென்ட், சியா, எட் ஷீரன், மிகோஸ் கார்டி பி , எல்லி கவுன்டிங் , டிராக்கி, அவிச்சி, இமேஜின் டிராகன் , செயின் ஸ்மோக்கர், பில்லி எய்லிஸ் , ஹேரி ஸ்டைல்ஸ் , ஷெளன் மென்டஸ் , லில்னாஸ் எக்ஸ் , அரியனா கிரான்டே மற்றும் ஒன்ரைக்சன் போன்றவர்களை குறிப்பிடலாம்.

பாப்புலர் மியூசிக் எனக் கூறப்படுகின்ற மேற்கத்திய நவீன இசையானது கி.பி. 1800-ஆம் ஆண்டு முதல் கி.பி. 2023 ஆம் ஆண்டான இன்றைய காலம் வரை மின்னணு மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியால் நவீனமடைந்து நாம் வியக்கும் விதமாக பிரபலமடைந்துள்ளது.

**முடிவுரை:-**

மேற்கத்திய நவீன இசையென்பது கண்டிரி இசை மற்றும் போக் இசையை மையமாகக்கொண்டு மேற்கத்திய செவ்விசையின் கூட்டு ஸ்வர கோர்வைகள் , நவீன மின்னணு இசைக்கருவிகள் மற்றும் மின்னணு தொழில் நுட்பத்தின் உதவியுடன் துவங்கப்பட்ட ஒன்று. துள்ளலிசையுடன் வெகு ஜன மக்களை கவரும் தன்மையுடையது. உலகிலுள்ள அனைத்து நாட்டு மக்களாலும் , விரும்ப கூடிய ஒரு இசையாக மேற்கத்திய நவீன இசை மாறிவிவட்டது. மேற்கத்திய நவீன இசையின் வடிவங்கள் தொழில்நுட்ப

ISSN: 2582-9513

வளர்ச்சிக்கு ஏற்பவும் , மக்களின் ரசனைக்கு ஏற்பவும் , காலத்திற்கு ஏற்பவும் மாறிக் கொண்டே இருக்கும் தன்மையுடையது. இவ்விசையின் தாக்கம் திரைப்படத் துறையிலும் வெகுவாக பரவிவிட்டது. மேற்கத்திய நவீன இசையானது அமெரிக்கா மற்றுமு ; இங்கிலாந்தை மையமாகக்கொண்டு உலகிலுள்ள அனைத்து நாடுகளுக்கும் ஊடகங்கள் வாயிலாக வெகுவாககடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு மேற்கத்திய நவீன இசை உலகம் முழுவதிலும் பிரபலமான இசையாக மாறிவிட்டது.

துணை நூற்பட்டியல்:-


1. A History of Western Music – J. Peter Burkholder, Donald Jay Grout, Claude V. Palisca
2. The Oxford Companion to Music – Alison Latham
3. Oxford Dictionary of Music – Michael Kennedy, Joyce Kennedy, Tim Rutherford Johnson
4. A concise history of Western Music – Paul Griffiths
5. History of Western Music – Hugh M. Miller & Dale Cockrell
6. The little book of Music Theory & Musical Terms – Wise Publications
7. History of the Modern Music of Western Europe – Raphael Georg Kiesewetter, Robert Muller
8. The History of Modern Music – John Pyke Hullah